# சாலைப் பகுதி பாழாகி கிடக்கிறது:

## மாநகர் மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

கோலாலம்பூர், ஜன. 7-

கோலாலம்பூர் பிரிக்பீல்ட்ஸ் ஜாலான் தம்பி பிள்ளை பகுதியின் பின்புறம் உள்ள சாலைப்பகுதி பாழடைந்துக் கிடப்பதாக சண்முகம் பழனிசாமி கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் அலுவலகத்தில் புகார் ஒன்றை தாக்கல் செய்துள்ளார். குறிப்பாக இச்சாலைப் பகுதி குண்டும் குழியுமாக சாலை பயனீட்டாளர்களின் பாதுகாப்பிற்கு பெரிய மருட்டலாக விளங்குகிறது. ஜாலான் தம்பி பிள்ளை பிரிக்பீல்ட்ஸ் தபால் அலுவலகத்தின் பின்பகுதி சாலைப்பகுதியில் நீர் தேங்கி கிடக்கிறது. இங்குள்ள மக்களின் நடமாட்டத்திற்கும் போக்குவரத்திற்கும் இப்பகுதி பெரும் இக்கட்டான நிலையினை ஏற்படுத்தியுள்ளதாக சண்முகம் பழனிசாமி தெரிவித்தார்.






கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஆறாம் தேதியன்று அவர் இவ் அலுவலகத்தில் அதிகாரப்பூர்வமாக புகாரை தாக்கல் செய்துள்ளார். இது ஒரு பொது மக்களின் பொது நலன் பிரச்சினை. இதில் கிஞ்சிற்றும் தயக்கமோ தாமதமோ கூடாது. பரிகாரம் காண வேண்டிய ஓர் அவசர அவசிய பிரச்சினை.

14 நாட்களுக்குள் பரிகாரம் காணப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் வாக்குறுதி வழங்கியது. காப்பாற்றப்பட வேண்டும். மாநகர் மன்றம் விரைந்து நடவடிக்கை எடுப்பீர் என்று சண்முகம் பழனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.